ராணி
காமிக்ஸ்



மேஸ்திரி கொலை!

21-ஆம் நூற்றாண்டை நோக்கி

வேகமிகு கம்ப்யூட்டர், வியத்தகு அறிவு;
விண்ணில் சாடும் நுண்ணிய நுட்பம்;
கடலடியிலும் பனிக் கண்டத்திலும்
வளம்பல காணும் பயனுடை ஆய்வு;
திரும்பிடும் திசையெல்லாம்
தெரிந்திடும் மாற்றங்கள்—
இன்றே இப்போதே எழுவோம் ஆயத்தமாய்.
இல்லையெனில், புரட்சியின் பார்வை
விழாமல் போகும். அறிவியலும் தொழிலியலும்
அருகிருக்க வறுமையை ஓட்டுவோம்.

ஒன்றுபட்டு முன்னேறுவோம்

davp 85/25

ராணி காமிக்ஸ் — 40
(மாதம் இருமுறை இதழ்)

பிப்ரவரி 15—28
1986

மேஸ்திரி கொலை!

அமெரிக்காவில் வெள்ளையர்கள் குடி ஏறிய காலம். கோமாஞ்சி நகர் எல்லையில் ஒரு ஓடை அருகே பில் என்பவர் தனது மாடுகளுடன் முகாம் அடித்தார். அவரிடம் காவல் தலைவர் ஷெரீப் டேன் வந்து—

அப்போது அமெரிக்காவில் மந்தை மந்தையாக மாடுகளை கிராமங்களில் இருந்து ஓட்டிச் சென்று நகர் புறங்களில் விற்பது வழக்கம்.
மாடுகள் நீண்ட தூரம் நடந்து வந்துள்ளன. கொஞ்சம் ஓய்வு தேவை. பையங்களுக்கும் நகரில் ஒருநாள் கேளிக்கை தேவை.
உம்... அதுபற்றிதான் நான் பேச வந்தேன்.


மாட்டு மந்தையை கோமாஞ்சி நகரைக் கடந்து கொண்டு போய் விற்கப் போவதாக மந்தை அதிபர் பில் கூறினர்.
மிஸ்டர் பில்! இதற்குமுன் இப்படி ஒரு மந்தை இங்கே வந்தது. அதை ஓட்டி வந்த வாலிபர்கள் கோமாஞ்சி நகரில் ஒரு கேளிக்கை விடுதியில் கலாட்டா செய்தார்கள். அவர்களை நான் கைது செய்ய வேண்டியதாகிவிட்டது.
உங்க எச்சரிக்கையை நான் என் மாடு ஓட்டிகளிடம் சொல்கிறேன் ஷெரீப்.

மந்தை அதிபரை எச்சரிக்கை செய்தபின் ஷெரீப் புறப்பட்டார்.
எனது பையன்களை நானே நகருக்கு அழைத்து செல்வேன். அவர்கள் கலாட்டா செய்யாமல் பார்த்துக்கொள்வேன்!
நன்றி மிஸ்டர் பில்!

மார்க் என்ற இளைஞன் ஷெரீப்பிடம் வந்து—
ஷெரீப்! உங்கள் நகரில் சந்தோசமாக பொழுதை கழிக்க விரும்புகிறோம்!
சரி! ஆனா சட்டம்—ஒழுங்கை கடைபிடியுங்க!

சட்டத்தை காப்பதில் நான் கடுமையானவன். மறக்க வேண்டாம். வருகிறேன்!

மார்க் அருகே எட்வர்ட் வந்தான். இந்த எட்வர்ட், சில தினங்களுக்கு முன்பாக, அந்த மாட்டு மந்தையில் வேலைக்கு சேர்ந்தவன்.
மார்க்! இந்த ஷெரீப் ரொம்ப தைரியசாலி. கோமாஞ்சி நகர மக்களும் வீரம் மிக்கவர்கள்.
அதைக் கேட்ட மார்க், தன் துப்பாக்கிகளை எடுத்தான்.
நானும் சண்டை செய்வதில் சளைத்தவன் இல்லை!
அப்போது அங்கே மூவர் குதிரையில் வந்தனர். அவர்களிடம் மந்தை அதிபர் பில் கேட்டார்—
யார் நீங்க?
ஏ! எட்வர்ட்! நாம் காண்பது கனவா? இவள் எவ்வளவு அழகான பெண்!


அங்கே வந்தவர் அந்த மாவட்டத்திலேயே பெரிய பண்ணை அதிபர். அவரிடம் பெரிய மாட்டு மந்தையும் இருந்தது. அவர்—
என் பெயர் கெம்ப். பக்கத்து பண்ணை அதிபர். நீங்கதான் இந்த மந்தைக்கு முதலாளியா?
ஆமா! என் பெயர் பில்! உங்களுக்கு என்ன வேண்டும்?

கடந்த தடவை இப்படி இங்கே மாட்டு மந்தை வந்து தங்கியபோது, என் பண்ணை மாடுகள் சிலவற்றை காணவில்லை. அதனால், உங்க மாடுகளை என் பண்ணை பக்கம் விட வேண்டாம்!
உங்க மாடுகளை நாங்க திருடி விடுவோமா?

பில் கோபமாக இப்படிக் கேட்டதும் கெம்பும் உரக்க பேசினார்.
உம்மை முன்கூட்டியே எச்சரிக்கை செய்கிறேன். உங்க மாடுகள் எங்கள் மாடுகளுடன் கலந்துவிடக்-கூடாது. இது எனது மேஸ்திரி மேகான். என் பண்ணைக்குள் நுழையும் அன்னியரை விரட்ட இவனுக்கு அதிகாரம் கொடுத்து உள்ளேன்.


ஆத்திரம் அடைந்தார்.
கெம்ப்! நீர் ஏதோ இந்தப் பகுதி மன்னர் மாதிரி பேசுகிறீரே! கீழே இறங்கும். உம் உயரத்தை நான் பார்க்கட்டும்!
இவர் மன்னர் என்றால் அது இளவரசி! உண்மையிலேயே அவள் இளவரசி போல இருக்கிறாள்!


கெம்ப், தன் குதிரையில் இருந்து கீழே குதித்தார்.
நான் உன்னைவிட உயரத்தில் குறைந்தவன் இல்லை. என் உடைமைகளை காக்க நான் சண்டை போட தயங்க மாட்டேன்!
என்னிடம் நீர் சண்டை போட வேண்டாம். தகராறு செய்யவே நீர் இங்கே வந்து இருக்கிறீர். உமது மாடுகள் எனக்குத் தேவை இல்லை.


பண்ணை அதிபர் கெம்ப்பின் மகள் அருகே சென்று மார்க் கேலி பேசினான்—
இங்கே இப்படி ஒரு அழகியை நான் எதிர்பார்க்கவில்லை, மிஸ்! நான் உன் வீட்டுக்கு வந்து என் மரியாதையை செலுத்த விரும்புகிறேன்!
எஸ்தர்! மாடு மேய்க்கும் சிறுவர்கள். நம் வீட்டுக்கு சாணம் அள்ளிப் போட வரலாம்!

நீ வந்தால் என் வீட்டு நாய் கூட உன்னைப் பார்த்து வாலை ஆட்டாது!
அப்படியா? அதையும் பார்த்து விடுகிறேன்!

கெம்ப் பெரிதாக சிரித்தார்.
எங்கள் பண்ணையில் உள்ள மாடு ஓட்டிகளுக்கு கால் பிடிக்க-கூட லாயக்கு இல்லாத நாடோடி நீ வந்த வேலையை பார்.
சில மாடு ஓட்டிகள், மாட்டைவிட கேவலம்!
மார்க்! அவர்களுடன் உனக்கு என்ன பேச்சு?


எஸ்தர் கூறிய வார்த்தைகள் முன்கோபியும், மூர்க்கனுமான மார்க் மனதை தைத்தன!
நீ ஆண் பிள்ளையாக இருந்தால், இந்நேரம் நாம் இருவரும் துப்பாக்கியை தூக்கி இருக்கணும்!
இருக்கலாம்! ஆனால் என் துப்பாக்கி பொம்மை துப்பாக்கி இல்லை.


மேலும் பேச்சு வளராமல், மார்க்கை பில் தள்ளிவிட்டார்.
மார்க்! பார்த்தாயா? அந்தப் பெண் என்ன பேச்சு பேசுகிறாள்?
எட்வர்ட்! அவளுக்கு என்னைப் பற்றி தெரியாது! நான் யார் என்று காட்டுகிறேன்!

அங்கிருந்து புறப்படும் முன் கெம்ப் கூறினார்—
எனது பண்ணை வழியாகவே உமது மந்தை வந்திருக்கு. எனவே உமது மாடுகளுடன் என் விசேட மாடுகள் கலந்து உள்ளனவா என்று பாரும்.
உமது மாடுகள் என் மந்தையில் கலந்து இருந்தால், அதை உம்மிடம் கொடுத்து விட தயார்!
பண்ணை அதிபர் கெம்பின் பேச்சு, மற்ற மாடு ஓட்டும் வாலிபர்களையும் கோபம் கொள்ளச் செய்தது.
நம்மை நாடோடி என்கிறார் அவர்!
கோமாஞ்சி நகரில் அவர்கள் நம்மை வம்புக்கு இழுக்கலாம்!
மிஸ்டர் கெம்பும், மிஸ் எஸ்தரும் பேசிய பேச்சு மார்க் மனதை ரணம் ஆக்கிவிட்டது.
என்னைப் பொருத்தவரை இப்பவே அந்த பண்ணையை தாக்கினால்தான் மனம் ஆறும்!
மார்க்! கோபத்தை அடக்கு!


மாடு ஓட்டுபவர்களில் 4 பேர்களை பில், முதலில் கோமாஞ்சி நகருக்கு அழைத்து போனார்.
பாஸ்! நானாக வலுச்சண்டைக்கு போக மாட்டேன். வந்த சண்டையை விடமாட்டேன்!
மார்க்! அந்த ஷெரீப் நியாயமான ஆளாக தெரிகிறார். அதனால் நகரில் எந்த தகராறும் வேண்டாம்!

மரபுப்படி, அவர்கள் தங்கள் வருகையை அறிவிக்க துப்பாக்கி முழக்கம் செய்தனர்!
ஷெரீப்
நான் சொல்லிவிட்டு வந்த எச்சரிக்கையை காப்பாற்ற வேண்டும்.
நாங்கள் வந்துவிட்டோம்! பொழுதை ஜாலியா கழிக்க வேண்டும்!

ஷெரிப் ஆபீஸ் அருகே இருந்த அந்த கேளிக்கை விடுதி முன் தொங்கிய அந்த போர்டு—
ஆ! நம்மை கேவலப்படுத்துகிறது இந்த அறிவிப்பு!
மாடு ஓட்டிகள் உள்ளே வரக்கூடாது!
அந்த போர்டை சுட்டு வீழ்த்த எத்தனித்த மார்க்கை, டில் தடுத்தார்.
இந்த போர்டை தூள் தூளாக்கிவிட்டு, இந்த விடுதிக்குள் நுழைவோம்!
இந்த விடுதியில்தான், இதற்குமுன் தகராறு நடந்து இருக்கு. அதனால் ஷெரீப் கோபப்படும் வகையில் நாம் நடக்ககூடாது! வா!

பிறகு அவர்கள், அதே தெருவில் இருந்த இன்னொரு விடுதிக்கு சென்றார்கள்.
கேளிக்கை விடுதி
இந்த விடுதியில் எந்த தகராறும் இல்லாமல் பொழுதை போக்கலாம்! வாங்க!
அந்த கேளிக்கை விடுதியில் இருந்து எட்வர்ட், மெல்ல நழுவி, அடுத்து இருந்த ஒரு ஆபீசுக்கு போனான்.
BOYD WITTICK
அங்கே மிஸ்டர் விட் என்பவரை எட்வர்ட் சந்தித்து பேசினான்.
மிஸ்டர் விட்! அந்த மார்க்- என்பவனிடம் ஏதாவது ஏடாகூடமா செய்யுங்க. உடனே தகராறு, சண்டைதான்!

முதலில் அந்த கேளிக்கை விடுதியில் தகராறு ஏற்படுத்தணும். அதற்கு மிஸ்டர் கெம்ப்தான் காரணம் அப்படீன்னு மிஸ்டர் பில் ஆட்கள் நினைக்கணும்.
அப்போதான் கெம்ப் மாடுகளை நாம் திருடுவதற்கு வசதியா இருக்கும்!

சதி திட்டத்தை முடிவு செய்தபின் மிஸ்டர் விட், எட்வர்ட் இருவரும் கேளிக்கை விடுதிக்கு போனார்கள்.
ஏய் ரூபி! இனி உன் வேலையைக் காட்டு!
சரி, பாஸ்!

கண்ணே!
பல நூறு மைல்
தூரம் மாடு ஓட்டி
வந்த களைப்பு,
இப்போ பறந்து
போய்விட்டது!
அடுத்த கணம்—
போதும்,
இனி நான்
ஆடணும்!
ஏய்!
சார்!
அங்கே உங்க
ஆளுக்கும் இன்னொரு
ஆளுக்கும்
தகராறு!
அவள் என்னுடன்
ஆடிக்கொண்டு இருக்கையில்
நீ எப்படி தடுக்கலாம்?

மார்க், ரூபி இருவரும் மோதத் தொடங்கினர்.
நாடோடி பயலுக்கு நடனம் ஒரு கேடா! இந்தா வாங்கிக்கோ!
ஏய்! என் ஆளை தாக்க நான் விடமாட்டேன்!


மார்க் மயங்கி விழுந்ததும் மிஸ்டர் பில்லும், ரூபியும் மோதினர்.
மிஸ்டர்! நீயாக வந்து மோதுகிறாய். இனி நான் விட மாட்டேன்!

அடுத்த நிமிடம் மிஸ்டர் பில் ஆட்களுக்கும், மிஸ்டர் "விட்"டின் ஆட்களுக்கும் சண்டை மூண்டது. விளைவு? விடுதி சின்னாபின்ன பட்டது!

சண்டையை ரசித்து சிரித்துக்கொண்ட மிஸ்டர் விட், கேளிக்கை விடுதி முதலாளி பீட்டரிடம் கூறினார்—

மயக்கம் தெளிந்த மார்க், துப்பாக்கி முனையில் அனைவரையும் மிரட்டினான்.
வாங்கடா! வாங்க! சண்டை போட தைரியம் உள்ளவங்க துப்பாக்கியை தூக்குங்க!
அப்போதுதான் ஆபீசில் வந்து அமர்ந்த ஷெரீப்பிடம் விடுதி அதிபர் பீட்டர் வந்து—
ஷெரீப்! உடனே வாங்க! அந்த மாடு ஓட்டிகள் என் விடுதியை சின்னாபின்ன படுத்துகிறார்கள்!
உடனே ஷெரீப் டேன், பீட்டருடன் விரைந்தார். அப்போது விடுதிக்குள் துப்பாக்கி சத்தம் கேட்டது.
துப்பாக்கியால் சுடுகிறார்கள். இந்நேரம் கொலை விழுந்து இருக்கும்!
நான் எதிர்பார்த்த தகராறு!

அப்போது உள்ளே மிஸ்டர் பில்லும், மிஸ்டர் விட்டின் ஆள் ரூபியும் மோதிக்கொண்டு இருந்தனர்.
பாஸ்! அந்த முரடனை அடித்து வீழ்த்துங்க. இல்லே, நான் சுட்டு வீழ்த்துகிறேன்!


மற்றவர்களை பயமுறுத்த மார்க் சுட்டான்.
ஏய் மிஸ்டர்! நீ ஏன் சந்தோசமா சிரிக்கிறாய்?


மிஸ்டர் விட்டை நோக்கி மார்க் சுட்டான்.
இருந்தே நீ இருக்கிறாய்!
மார்க் போதும்! துப்பாக்கியை கீழே போடு!

அப்போது காவல் தலைவர் ஷெரீப் அங்கே வந்து, மார்க்கை பிடித்தார்.
ஏய்! மரியாதையா துப்பாக்கியை கீழே போடு!

அதைக் கேட்டு ஆத்திரத்தோடு திரும்பிய மார்க், ஷெரீப்பிடம்—
நீங்க இதில் தலையிடக்கூடாது! காவல் தலைவரா இருக்கலாம், ஆனா, நீங்களும் இந்த ஆட்களோடு சேர்ந்தவர்தான்!
மார்க்! முட்டாள்தனமா பேசாதே!

மார்க், ஷெரீப்பை நோக்கி துப்பாக்கி-
-யை நீட்டினான். ஆத்திரம் கொண்ட
ஷெரீப் அவனது கைகளை தாக்கினார்.
துப்பாக்கியை கீழே போடு என்றால்...
ஷெரீப் தாக்கியதால், மார்க்கின்
துப்பாக்கிகள் கீழே விழுந்தன.
அப்போது பில் அங்கே வந்து—
ஷெரீப்! மார்க் எந்த தப்பும் செய்யவில்லை.
மிஸ்டர் பில்! நீர் இதில் தலையிட வேண்டாம்!
ஷெரீப்புக்கும், மிஸ்டர் பில்லுக்கும் வாக்குவாதம் முற்றி
கைகலப்பில் முடிந்தது.
ஷெரீப்பை எதிர்த்தே மோதுகிறாயா?

ஷெரீப் குத்து தாங்காமல், பில் கீழே விழுந்தார். மார்க்கின் துப்பாக்கிகளை ஷெரீப் எடுத்துக்கொண்டார்.
ஷெரீப்! இந்த சண்டைக்கு நான் காரணம் இல்லே!
இந்த துப்பாக்கிகள் என்னிடம் பத்திரமாக இருக்கட்டும்!


ஏய் பீட்டர்! இந்த சண்டை எப்படி ஆரம்பித்தது?
இந்த மாடு ஓட்டிகள்தான் தகராறை ஆரம்பித்தது!
ஆமா ஷெரீப்! அவங்கதான் தொடங்கியது!
அந்த வாலிபன் என்னே சுட்டு கொல்ல பார்த்தான்!

உடனே ஷெரீப், மார்க்கை பிடித்துக்கொண்டார்.
என்னை எதிர்த்ததற்காக இவரை கொண்டு செல்கிறேன். நீர், உமது மற்ற ஆட்களுடன் சீக்கிரம் இந்த நகரை கடந்து போய்விடும்!
மார்க்கை கைது செய்யகூடாது. அவன் ஒன்றும் செய்யவில்லை.
ஜெயிலில் அவன் பத்திரமா இருப்பான். அவனுக்கு எதிரா நிறைய சாட்சி இருக்கு. நீர் உம் மந்தை முகாமுக்கு போகலாம்!


மிஸ்டர் பில் வெளியே வந்து தன் குதிரையில் ஏறி—
ஷெரீப்! நீங்க தவறு செய்றீங்க. சண்டைக்கு நாங்க காரணம் இல்லே!
நீங்கதான் சண்டையை ஆரம்பித்தது என்று நிறைய சாட்சியம் இருக்கு. எனக்கு அது போதும்!


பில் போய்விட்டார். மார்க்கை ஷெரீப் சிறையில் அடைத்தார்.
மார்க்! நான் இப்படி செய்யாவிட்டால், இன்று இரவுக்குள் நீ ஒரு கொலே செய்துவிடுவாய்.
வாயை மூடும்!

மறுநாள் காலே மார்க்கை ஷெரீப் விடுவித்தார்.
இந்தா உன் துப்பாக்கிகள்! உன் மந்தை முகாமுக்கு போ. நகரில் தலேகாட்டாதே.
நன்றி, ஷெரீப்.

மார்க்! கேளிக்கை விடுதி அதிபர் பீட்டர், புகார் எதுவும் எழுதி கொடுக்கவில்லே. அதனுல் உன்னே விடுதலே செய்கிறேன்.
ஷெரீப்! நீங்க எங்க மீது கடுமையா இருக்கீங்க. உம்...உங்க நிலேமை அப்படி!

மார்க் குதிரையில் ஏறி புறப்பட்டான்.
மார்க்! நான் சொன்னதை மறந்துவிடாதே. இனி ஏதாவது சண்டையில் ஈடுபட்டால். உன்னே நீதிபதி முன் நிறுத்துவேன். மிஸ்டர் பில்லிடமும் சொல்!
இந்த நகருக்கு வராவிட்டால் எங்க தலே வெடித்து விடாது!

மிஸ்டர் பில் தன் மாட்டு மந்தையுடன் முகாம் அடித்திருந்த இடத்துக்கு மார்க் வந்தான். அவன் விடுதலை அடைந்து வந்ததைப் பார்த்து பில்லும், மற்றவர்களும் மகிழ்ச்சி அடைந்தனர்.
ஏய் மார்க்! எப்படி இருக்கிறாய்? உன்னை பார்ப்பதில் மகிழ்ச்சி!
அந்த ஷெரீப், ரொம்பதான் பயமுறுத்துகிறார். அவரது உபதேசங்களை கேட்க சகிக்கலை!
என்னிடம் வம்புக்கு வந்தவர்களை என்னால் மன்னிக்க முடியாது! இந்த மார்க்கை அவர்கள் மறக்கமுடியாத அளவுக்த ஏதாவது செய்யணும்!
இதை எல்லாம் மறந்துவிடு மார்க். அந்த ஷெரீப் ரொம்ப கண்டிப்பான ஆளா இருக்காரு. வீண் தகராறு வேண்டாம்!

மார்க்கின் கோபம், ஆத்திரம் அடங்கவில்லை. அமைதி இல்லாமல் தவித்த அவன் அன்று மாலை, எட்வர்ட்டுடன் பேசினான். எட்வர்டின் இரட்டை வேடம் மார்க்குக்கு தெரிய நியாயம் இல்லை.
எட்வர்ட்! எனக்கு பண்ணை அதிபர் கெம்பின் மகள் எஸ்தரை சந்திக்க வேண்டும் போல் இருக்கு. அவள் மனதை மாற்றணும்!
மார்க்! நீ அவளுடன் கொஞ்சம் மனம் விட்டு பேசினால் அது உன் மனதுக்கு ஆறுதலா இருக்கும். இல்லையா?
கொஞ்ச நேரம் கழித்து, எட்வர்ட் நைசாக அங்கிருந்து நழுவினான். குதிரையில் அவன் பறந்து போய் மிஸ்டர் விட்டை சந்தித்தான்.
பாஸ்! இன்று இரவு நம்ம திட்டத்தை நிறை-வேற்றலாம். ஏன் என்றால், இன்றிரவு மார்க், கெம்பின் பண்ணைக்குள் நுழைந்து அவர் மகளை சந்திக்க இருக்கிறான்!
வெரிகுட்! கெம்பிடம் விலை உயர்ந்த பசுக்கள் நிறைய உள்ளன. இன்று இரவு நான் நம் ஆட்களுடன் போகிறேன். நீ, அந்த மார்க்கை கவனித்துவிட்டு, எங்களுடன் வந்து சேர்ந்துகொள்!


அன்று இரவு எஸ்தரை சந்தித்து பேச மிஸ்டர் கெம்ப் பண்ணைக்கு மார்க் புறப்பட்டான். தன்னை ஒருவன் பின்தொடர்வது அவனுக்கு தெரியாது!
அந்த எஸ்தர் அற்புதமான பெண். நான் சாதாரண நாடோடியோ, மாட்டு ஓட்டியோ அல்ல. அதை அவள் புரிந்து கொள்ளும்படி இதமா பேசணும்!
இவனை தொடர்ந்து போக வேண்டும் என்ற அவசியம் இல்லை. அவனை பிடிக்கவேண்டிய இடத்தில் பிடிக்கிறேன்!

ஒரு இடத்தில் எட்வர்டை ஒரு மர்ம முகமூடி எதிர் கொண்டான்.
இந்த முகமூடி வேஷத்தில் மார்க் என்னை அடையாளம் காண மாட்டான்!

அந்த உருவத்தை பார்த்து சுதாரிக்கும் முன், மார்க் தலையில் பலமாக தாக்கப் -பட்டான்.
இன்னும் 2, 3 மணி நேரம் இவன் மயக்கமா கிடப்பான். அது போதும்!

மிஸ்டர் கெம்பின் பண்ணையில் மார்க்கை மயங்கும்படி அடித்து போட்டு-விட்டு எட்வர்ட் இன்னோர் இடத்துக்கு விரைந்தான். அங்கே பல முகமூடிகள் இருந்தனர்! அது விட்டும். அவரது ஆட்களும்!
பாஸ்! நான் தயார்!
எட்வர்ட்! மிஸ்டர் கெம்பின் மேஸ்திரி மேகான் இப்போதுதான் தனது இரவு ரோந்துக்கு போனான்.
கெம்ப் பண்ணையில் உள்ள விலை உயர்ந்த பசுக்களை எப்படி திருட வேண்டும் என்று தன் ஆட்களுக்கு விட் விளக்கினார்.
ஒரு மாடு கூட விடாமல் நேரா நமது ரகசிய இடத்துக்கு ஓட்டிச் செல்லுங்க. எட்வர்ட்! நீ மேகானை கவனித்துக்-கொள்!
அவன் செத்துவிட்டான் என்றே வைத்துக்கொள்ளுங்க!
மேஸ்திரி மேகான் இரவு காவலாளி இடம் கூறினான்—
சிலிம்! இன்று இரவு ஏதோ நிகழும் போல் என் உள் உணர்வு உணர்த்துது.விழிப்பா இருக்கணும்!
நீங்க வந்தது எனக்கு உற்சாகமா இருக்கு! மாடுகளும் இன்று ஏனோ அமைதி இல்லாமல் இருக்கின்றன!


திடீர் என்று இரண்டு குண்டு காவலாளி முதுகில் தாக்க, அவன் செத்து வீழ்ந்தான்!
சிலிம்! இது அந்த நாடோடி பயல்கள் வேலைதான்!


துப்பாக்கி சத்தம் கேட்டு மேகான் குதிரை மிரண்டது. அதோடு மாடுகளும் மிரண்டு நிலைகுலைந்தன! அப்போது சில மர்ம உருவங்களை மேகான் பார்த்தான்.
ஏய்! கொலைகார திருடர்களே! உங்களை விடமாட்டேன்!

மர்ம திருடர்கள் மாடுகளை விரட்டுவதையும், அதனால் மாடுகள் சிதறி ஓடுவதையும் பார்த்த மேகான் துப்பாக்கியுடன் பாய்ந்தபோது ஒரு முகமூடி உருவம் எதிரில் வந்தது.
ஏ மேஸ்திரி! உன் மாடுகளுக்கு விடை கொடு!


அடுத்த கணம், மேஸ்திரி மேகானை எட்வர்ட் சுட்டுக் கொன்றான்.
இந்தக்-கொலையை மார்க்-செய்தது போல் தோன்ற என்ன செய்ய வேண்டும் என்று எனக்கு தெரியும். அதைச் செய்கிறேன்.



பிறகு எட்வர்ட், மிஸ்டர் விட் இருந்த இடத்துக்கு வந்தான்.
எட்வர்ட்! அபாரமாக செய்தாய். நீ இங்கே எங்காவது மறைந்து கொள். மற்றவர்கள் இரவோடு, இரவாய் இந்தப் பண்ணையில் உள்ள எல்லா மாடுகளையும் ஓட்டிச் செல்லட்டும்.
அந்த பண்ணையை ஒட்டி ஒரு நீர் ஓடை போனது. அதன் வழியாக திருட்டு மாடுகளை ஓட்டிச் செல்லும்படியும், அப்போதுதான் தடம் தெரியாது என்றும் விட் கூறினார்.
காலையில், மாடுகள் திருடப்பட்டு மேகான் கொல்லப்பட்டு இருப்பதை அறிந்து கெம்ப் திடுக்கிடுவார்.
கொலையை, இங்கே முகாம் அடித்து இருக்கும் பில்லின் ஆட்கள் செய்திருப்பதாக அவர் நினைப்பார். இருவருக்கும் ஏற்கனவே தகராறு!

இதற்கு இடையில், மயங்கி கிடந்த மார்க், மயக்கம் தெளிந்தான். அவன் தலை வலித்தது. மெள்ள எழுந்து நின்றான்.
கெம்பின் காவலாளிகள் யாரோ என்னை தாக்கி இருக்க வேண்டும். அவர்கள் ஏற்கனவே எச்சரிக்கை செய்தார்களே!
மார்க்கின் தலை விண் விண் என்று வலித்துக்கொண்டு இருந்தது. மிஸ்டர் கெம்பின் மகள் எஸ்தரை சந்திக்கும் எண்ணத்தை கைவிட்டு விட்டு, அவன் முகாமுக்கு திரும்பினான்.
எவ்வளவு நேரம் மயங்கி கிடந்தேன் என்று தெரியவில்லை. முகாம் போய் தூங்கணும்!
மார்க் முகாமுக்கு திரும்பியபோது, அனைவரும் தூங்கிக்கொண்டு இருந்தனர். அவனும் போர்வையை போர்த்தியபடி படுக்க ஆரம்பித்தான். அப்போது அவனது ஒரு துப்பாக்கி இல்லாமல் இருப்பதை கண்டுபிடித்தான்.
எனது ஒரு துப்பாக்கி நான் மயங்கி விழுந்தபோது கீழே விழுந்து இருக்கலாம். காலையில் அங்கே போய், தேடிப் பார்க்க வேண்டும்!

மறுநாள் காலை. மார்க்கின் நெற்றியில் புடைத்துக்கொண்டு வீங்கி இருந்ததை பார்த்து மற்ற மாடு ஓட்டிகள் சிரித்தார்கள்.
என்னடா மார்க்! ராத்திரி யார்கிட்ட உதை வாங்கினே?
பண்ணை அதிபர் கெம்பா? அவர் மகளா?
யாரும் என்னை தொடவில்லை. தொட முடியாது. ராத்திரி, இருட்டில் குதிரையில் போகும் போது, ஒரு மரக் கிளை இடித்துவிட்டது.
மார்க், தான் தாக்கப்பட்டதையும், தன் துப்பாக்கி ஒன்று காணாமல் போய்விட்டதையும், வெளியே சொல்ல வில்லை.
மார்க்! ராத்திரி நீ முகாமிலேயே இருந்திருக்க வேண்டும்!
முந்தின நாள் இரவு, பண்ணையை சுற்றிப் பார்க்கச் சென்ற மேஸ்திரி மேகான் திரும்பாத செய்தி விடிந்ததும் பண்ணை அதிபர் கெம்பிடம் சொல்லப்பட்டது.
மேகான் ஒருவேளை பண்ணை யிலேயே படுத்து இருக்கலாம்!
இன்று நானும், அவனும் நகரத்துக்கு போவதாக இருந்தோம். அவனை தேடிப் போவோம்!

மாடுகள் அனைத்தும் திருடப்பட்டு மேகான், இரவு காவலாளி இருவரும் கொலை செய்யப்பட்டு கிடப்பதை கெம்ப் பார்த்தார்.
மேகானை யாரோ நெஞ்சில் சுட்டு இருக்காங்க!
மேகான் அருகில் கிடந்த துப்பாக்கியை கெம்ப் எடுத்து—
எஸ்தர், இந்த துப்பாக்கியை நினைவு இருக்கிறதா?
ஆமா அப்பா! அது அந்த நாடோடிப் - பயலுடைய துப்பாக்கி!
மிஸ்டர் பில்லின் ஆட்கள்தான் மாடுகளையும் திருடி இருக்க வேண்டும், பாஸ்!
அப்படித்தான் இருக்க வேண்டும். எனக்கு மாடுகள் களவு போனது பற்றி கூட கவலை இல்லை. மேஸ்திரியை கொன்ற கொலையாளியை பிடிக்கணும்!

கெம்ப் தன் ஆட்களுடன் ஓடைக் கரையில் முகாம் செய்திருந்த பில்லிடம் கோபமாக வந்தார்.
மிஸ்டர் கெம்ப், படை திரட்டிக்கொண்டு வர காரணம் என்ன?
எனது மேஸ்திரி சுட்டு கொல்லப்பட்டு உள்ளான். மாடுகள் விரட்டப்பட்டோ, களவாடப்பட்டோ உள்ளன!
பிறகு கெம்ப் ஒரு துப்பாக்கியை எடுத்தார்.
எனது மேஸ்திரி உடல் அருகே கிடந்தது. உம் ஆட்களில் ஒருவனை மார்க் என்பவனின் துப்பாக்கி.
அதைக் கேட்டதும் மார்க் முன்னே வந்து கூறினன்—
என் துப்பாக்கி காணுமல் போனது உண்மை. ஆனல் நான் கொலை செய்யவில்லை!
கெம்ப்! நீர் இங்கு இருந்து போய்விடும்!


ஒரு பயங்கர சண்டைக்கு இரு தரப்பும் தயார் ஆகியது.
மிஸ்டர் கெம்ப்! நாங்க இங்கே வந்து எல்லா கஷ்டத்தையும் அனுபவித்து விட்டோம். உம் மேஸ்திரியை கொன்ற கொலையாளி தேவை என்றால் தேடி கண்டு பிடியுங்க.


எனது ஆட்களில் யாரையும் நீர் பிடித்துப் போக முடியாது. அதற்காக சண்டை போடவும் நாங்க தயார். மார்க் மீது ஏதாவது குற்றம்சாட்ட, வேண்டும் என்றால், ஷெரீப்பிடம் புகார் கொடும்!
ஆமா, அப்படித்தான் செய்யப் - போகிறேன்!


மார்க்கின் – துப்பாக்கியுடன், கெம்பும் அவரது ஆட்களும் புறப்பட்டனர்.
ஷெரீப்பிடம் போகிறேன். என் மேஸ்திரியை கொன்றவனை சட்டம் சமாளிக்கும். ஆனால் அதற்காக நான் அவனை விட மாட்டேன்.
கெம்பும் அவர் ஆட்களும் போனபின் மார்க்கிடம் பில் கேட்டார்—
மார்க்! நிலவரம் சரி இல்லே. உன் துப்பாக்கி அங்கே எப்படி போனது?
பில் சார்! நான் சொல்வதை கொஞ்சம் கேளுங்க!


முந்திய நாள் நடந்ததை மார்க் கூறினான்.
சரி, இதோ புறப்படு-கிறேன்.
உன்னை நேற்று தாக்கியவன்தான் கொலையாளி. என்றாலும் சந்தேகத்தின் பேரில் ஷெரீப்- உன்னை கைது செய்யலாம். எனவே நீ இங்கிருந்து உடனே போய் செந்தினல் என்ற இடத்தில் மறைந்திரு. நாங்கள் அங்கே வந்ததும் எங்களுடன் சேர்ந்துகொள்!
அடுத்த கணமே மார்க் புறப்பட்டான். ஆனால் எட்வர்டோ—
பாஸ்! நீங்க தப்பு செய்றீங்க! மார்க் தலைமறைவாகி விட்டால், இந்தக் கொலையை அவன்தான் செய்தான் என்றாகிவிடும்!
எட்வர்ட் உனக்குத் தெரியாது. ஷெரீப் நம் மீதுதான் சந்தேகப்படுவார். பிறகு, நாம் யாரும் இங்கிருந்து போக முடியாது!


ஒரு மணி நேரம் கழித்து, ஷெரீப் டேன். அவரது உதவியாளர், பண்ணை அதிபர் கெம்ப் ஆகியோர் அங்கே வந்தனர்.
மிஸ்டர் பில்! இந்த துப்பாக்கியின் சொந்தக்காரன் மார்க்கை கைது செய்ய வந்திருக்கேன். அவனை நீர் தலைமறைவு ஆக்கி-விட்டீர்!
மார்க் கொலை செய்யவில்லை. மாடுகளையும் திருடவில்லை!

ஷெரீப்! நான் இங்கே எனது ஆட்களை காவலுக்கு வைத்திருக்க வேண்டும்!
அதை விடுங்க மிஸ்டர் கெம்ப்! இனி சட்டம், தன் வேலையைச் - செய்யும்!

ஷெரீப் கேளுங்க! மார்க் நேற்று இரவு மிஸ்டர் கெம்ப் பண்ணைக்கு போய் இருக்கிறான். திடீர் என்று யாரோ அவனை தலையில் தாக்கி இருக்கிறார்கள். அந்த மர்ம ஆசாமிதான் மார்க் துப்பாக்கியை எடுத்து, மேஸ்திரியை சுட்டு இருக்கணும்.
இதுபற்றி நான் புலன் விசாரணை நடத்துகிறேன். அதுவரை இரு தரப்பினரும் எந்த சண்டை சச்சரவிலும் ஈடுபடக்கூடாது.

பிறகு ஷெரீப் தனியாக, கொலை நடந்த இடத்துக்கு போனார். ஒரு மணி நேரத்தில் அவர் திரும்பி வந்து—
இந்த மர்மக் கொலையில் துப்பு துலக்க — மார்க் தேவை.
பில், உம் ஆட்கள் 4 பேரை என்னுடன் அனுப்பும்! மார்க்கை பிடித்து வருகிறேன்.


மிஸ்டர் பில்லுக்கு ஆதரவாக அவரது ஆட்கள் பேசினர்.
ஊகும்... நாங்க உங்களுடன் வர மாட்டோம்!
நகரில் இருந்து, உங்களுக்கு தேவையான ஆட்களைக் கூட்டிக் கொண்டு போங்க!


அதனால் ஆத்திரம் அடைந்த ஷெரீப் அவர்களிடம் கூறினார்—
மார்க் குற்றவாளி இல்லை என்றால் விடுதலை செய்யப் படுவான். அவன் தலைமறைவாக இருந்தால், அவன் குற்றவாளியோ, இல்லையோ தேடப்படும் நபர்கள் பட்டியலில் சேர்ந்துவிடுவான்! அது அவனுக்கு எப்போதும் ஆபத்து!


குற்றவாளியை தலைமறைவு ஆக்கிய குற்றம் மற்றவர்கள் மீது சுமத்தப்படும் என்று ஷெரீப் எச்சரித்தார்.
எனவே மிஸ்டர் பில்! நான் காட்டும் 4 பேரை என்னுடன் அனுப்பும்! மார்க்கை பிடித்து வருகிறோம்.

வேறு வழி இல்லாமல் ஷெரீப்புடன் போக 4 பேர் சம்மதித்தனர். ஷெரீப், அவர்களுடன் புறப்பட்டார்.
இதோ! மார்க் போன குதிரைத் தடம். இதை பின்பற்றி அவனைப் போய் பிடிக்கலாம்.
வாங்க போகலாம்! இந்த கால் தடத்தை பின்பற்றி போவோம்!
ஷெரீப் அமைத்த நால்வர் படையில் எட்வர்ட்டும் இடம் பெற்று இருந்தான். அதில் அவனுக்கு விருப்பமே இல்லை. என்றாலும் குள்ள நரியான அவனிடம், ஒரு புதிய யோசனை உதயம் ஆனது!
ஷெரீப் கேட்டால், கைதாக மறுத்தான்; சுட்டேன் என்று கூறி விடலாம்!


இதற்கிடையில், மிஸ்டர் விட் ஆட்கள், களவாடப்பட்ட கெம்பின் மாடுகளை வேக வேகமாக ஓட்டிச் சென்றனர்.
சீக்கிரம்! மாடுகளை ஓடை வழியாக ஓட்டிப் போய் மறைவிடத்தில் அடைக்கணும்!

அந்த ஓடையில், ஆள் நடமாட்டமே இல்லாத ஒரு இடத்தில் ஒரு பெரிய குகை இருந்தது. நீளமான அதன் வழியாக சென்றால் 4 மலைகளுக்கு நடுவே ஒரு சமவெளி வரும். திருடும் மாடுகளை அங்கேதான் மறைத்து வைத்து, பிறகு விற்பார்கள். 3 மணி நேரத்தில் அந்த இடத்தை விட் ஆட்கள் அடைந்தனர்.
மாடுகளை தண்ணீர் வழியாக கொண்டு வந்ததால் தடம் தெரியாது. இந்த இடமும் யாருக்கும் தெரியாது!


யாரும் கண்டுபிடிக்க முடியாத அந்த நீண்ட சுரங்க குகை வழியாக எல்லா மாடுகளும் கொண்டு போகப்பட்டன. மாடுகளை விட் ஆட்கள் காவல் காத்தனர்.
இந்த குகைக்கு அந்தப் பக்கம் நிறைய புல் இருக்கு. எனவே மாடுகளுக்கு எந்த பிரச்சினையும் இராது!

வாலிபன் மார்க்கின் குதிரை போன தடத்தை பின்தொடர்ந்து ஷெரீப்-டேனும், நால்வர் படையும் ஒரு பாறையை அடைந்தனர்.
இதுவரை மணல் பாங்காக இருந்ததால், தடம் பார்த்து வந்தோம். இப்போ பாறைப் பகுதிக்கு வந்துவிட்டோம் இனி தடத்தைப் பார்த்து போக முடியாது!


அந்தப் பாறைப் பகுதியில் அவர்கள் மார்க்கை தொடர்ந்து தேடினர்.
மார்க் எங்கே மறைந்து இருப்பான் என்று உங்களுக்கு தெரியுமா? இல்லை நாம் தொடர்ந்து தேடணுமா?

அந்த மாதிரி வாய்ப்பை எதிர்பார்த்து இருந்த எட்வர்ட்—
ஷெரீப் சார்! நாம் மொத்தமா தேடி பிரயோஜனம் இல்லை! ரெண்டு, மூணு குழுவா பிரிஞ்சு போய் தேடுவோம்! யாராவது அவனைப் பார்த்தால், எந்த சண்டையும் இல்லாமல் உங்களிடம் சரண் அடையச்— —சொல்வோம்!
இது நல்ல யோசனை!

சரி! நீங்க ரெண்டு, மூணு
அணியா பிரிஞ்சு தேடுங்க.
நான் தனியா தேடுகிறேன்.
யாராவது மார்க்கை
பார்த்தால் வானத்தில்
2 தடவை சுடுங்க!


செந்தினல் என்ற இடத்தில் மார்க் இருப்பான் என்று தெரிந்திருந்த
எட்வர்ட். தனியாக போய் தேடத் தொடங்கினான்.
மார்க்கை பார்த்ததும்
2 தடவை சுடுவேன்.
வானத்தை நோக்கி
அல்ல. அவன் இதயத்தை
நோக்கி. ஷெரீப் வந்து
பார்க்கும்போது அவன்
செத்திருப்பான்!

மார்க் மறைந்து இருந்த இடத்துக்கு எட்வர்ட் வந்தான். எட்வர்டின் சதி திட்டம் மார்க்குக்கு தெரியாது.
எட்வர்ட் உன்னை பார்ப்பதில் மகிழ்ச்சி! பாஸ் அனுப்பினாரா?
எட்வர்ட்! ஏன் பேசாமல் இருக்கிறாய்? பாஸ் பில் செய்தி அனுப்பினாரா? மேஸ்திரி கொலை என்னவாச்சு?
திடீர் என்று எட்வர்ட், துப்பாக்கியை தூக்கி மார்க்கை குறி வைத்தான்.
மார்க்! உனக்கு செய்தி கொண்டு வந்து இருக்கிறேன். அது என்ன தெரியுமா? இந்த கொலை வழக்கில் இருந்து உன்னை விடுவிப்பதுதான். அதற்கு ஒரே வழி, உன்னை தீர்த்து கட்டுவதுதான்.


அதைக் கேட்டு மார்க் அதிர்ச்சி அடைந்தான். எட்வர்ட் சுடுவதற்கு முன், எப்படி தன் துப்பாக்கியை எடுத்து எட்வர்டை சுடுவது என்று அவன் நினைக்கையில்—
இப்போது புரியுது. நீதான் அன்று இரவு என்னை...
மார்க்! உன் தலைமறைவு வாழ்வுக்கு முடிவு கட்டு கிறேன்!


எட்வர்ட் விரல் துப்பாக்கியின் விசையை அழுத்த இருந்த நேரத்தில் ஷெரீப் டேனின் சிம்மக் குரல் இடி முழக்கம் போல் கேட்டது!
துப்பாக்கியை கீழே போடு! உம்!


ஷெரீப் திடீர் என்று அங்கே வந்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த எட்வர்ட், ஷெரீப்பை நோக்கி துப்பாக்கியை திருப்பும் போது, ஒரு குண்டு பாய்ந்து வந்து அவன் கையைத் தாக்கியது!
ஆ! ஐயோ!

துப்பாக்கி கீழே விழ, கையில் இருந்து ரத்தம் கொட்ட, எட்வர்ட் தப்பி ஓட முனைந்தான். ஆனால் ஷெரீப் விடவில்லை.
நீ தனியாக பிரிந்து வந்த போதே உன்னை சந்தேகப்-பட்டேன்!


ஷெரீப் அவன் மீது பாய்ந்தார்.
என்னிடமா, உன் கைவரிசையை காட்டுகிறாய்?


ஷெரீப் பாய்ந்த வேகத்தில் குதிரையில் இருந்து விழுந்த எட்வர்ட் தப்பிக்க முயன்றான். கோபம் அடைந்த ஷெரீப் அவனை துவைத்து எடுத்தார்!

எட்வர்ட் மயங்கி தரையில் விழுந்தான். அப்போது மார்க் வந்து—
ஷெரீப்! என் உயிரை காப்பாற்றிய உங்களுக்கு நன்றி! ஆனா, என்னை நீங்க கைது செய்ய விட மாட்டேன்!
மார்க்! முட்டாள்தனமா பேசாதே!

சமயோசித புத்தியும், துணிச்சலும் கொண்ட ஷெரீப்—
துப்பாக்கியை கீழே போடு மார்க்! மேஸ்திரியை கொலை செய்தது நீ அல்ல. அது எனக்குத் தெரியும். கொலை செய்தது இந்த எட்வர்டுதான்.


துப்பாக்கி சத்தம் கேட்டு மற்றவர்கள் அங்கே வந்தனர்.
எட்வர்ட் மயங்கி விழுந்து கிடப்பதை பார்த்தனர்.
இப்போது மேஸ்திரி கொலையில் மர்மம் விலகிவிட்டது. கொலையைச் செய்தது எட்வர்டுதான். ஆனால் அவனை பேசச் செய்வது தான் கடினம்.


மயங்கி கிடந்த எட்வர்டை குதிரையில் தூக்கி போட்டுக்கொண்டு அனைவரும் புறப்பட்டனர்.
ஷெரீப்! எட்வர்டுதான் கொலையாளி என்று எப்படி நிரூபிப்பது?
நீதிபதியை திருப்தி செய்யும் அளவுக்கு ஆதாரம் தேவை. பில் இருக்கும் முகாம் போய், எட்வர்ட் மயக்கம் தெளிந்ததும் நல்லா விசாரிக்கணும்!

பில் அவரது மாட்டு மந்தையுடன் தங்கி இருக்கும் இடத்துக்கு ஷெரீப் டேன் வந்தார். "பில்"லிடம், நடந்ததைக் கூறினார்.
ஷெரீப்! எட்வர்ட், இடையில் வேலைக்கு வந்தவன். கேளிக்கை விடுதியில் நடந்த சண்டையில் அவன் கலந்து கொள்ளவில்லை. அதனால் அவனை நல்லவன் என்று நம்பினேன்.
நான் ஒரு குதிரை தடத்தோடு இன்னோர் குதிரைத் தடம் கெம்ப் - பண்ணையை நோக்கி போய் இருப்பதைப் பார்த்தேன்.
எனவே உங்க முகாமில் இருந்து 2 பேர் கெம்ப் பண்ணைக்கு போய் இருக்காங்க. மார்க்கை எட்வர்ட் கொல்ல முயன்றதில் இருந்து, கெம்ப் பண்ணையில் மார்க்கை தாக்கி மார்க் துப்பாக்கியால் மேஸ்திரியை கொன்றது எட்வர்ட்தான் என்பது புலனாகிறது!
எட்வர்டுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.
எட்வர்ட் மீது உள்ள சந்தேகத்தால், மார்க்கை பிடிக்க என்னிடம் ஆட்களை கேட்டீர்-களா?
ஆமா! எட்வர்ட் மீது சந்தேகம் கொண்டே அவனை நான், மார்க்கை பிடிக்கும் படையில் சேர்த்தேன். கடைசியில் அவன் மட்டும் தனியாக தேட முயன்றபோது, என் சந்தேகம் ஊர்ஜிதம் ஆகி, அவனை பின் தொடர்ந்தேன்.


எட்வர்ட் மயக்கம் தெளிந்து எழுந்தான்.
கொலையை நேரில் பார்த்த ஒருவர் சாட்சியம் தேவைப்படுகிறது. தன்னை கொலை செய்தது யார் என்று மேஸ்திரிக்கு தெரியும்! ஆனால் செத்தவன் சாட்சி சொல்ல மாட்டானே!

மேஸ்திரி கொலை வழக்கில் ஷெரீப் மும்முரமாக ஈடுபட்டதால் மிஸ்டர் கெம்பும் அவர் ஆட்களும் மாட்டு மந்தை திருட்டை கண்டுபிடிப்பதில் ஈடுபட்டனர்.
மாடுகளின் கால் தடம் இங்கே தெரிகிறது. இதை பின்தொடர்ந்து போவோம், வாங்க!

மேஸ்திரியை கொன்றவனை ஷெரீப் பிடிக்கட்டும். நாம் மாட்டு திருடர்களை பிடிப்போம். இந்த ஓடை கரைகளிலும் தடம் தெரியுது. எனவே ஓடை வழியா போவோம்!
கோமாஞ்சி நகரில் மிஸ்டர் விட் பூரிப்போடு இருந்தபோது, ஷெரீப்பின் உதவியாளர் வந்து—
மிஸ்டர் விட் அவர்களே! ஷெரீப் உங்களுடன் பேச வேண்டும் என்கிறார். ஆபீசுக்கு வருகிறீர்—களா?
அந்த கேளிக்கை விடுதியில் நடந்த சண்டை பற்றி ஷெரீப் என் சாட்சியம் கேட்பார்! வருகிறேன்.

ஷெரீப் ஆபீஸ் போன விட்,
அதிர்ச்சி அடைந்தார்.
என்ன? பண்ணை மேஸ்திரியை கொன்றவன் பிடிபட்டு விட்டானா?
ஆமா, வாங்க! ஜெயில் அறை போவோம்!

இந்த எட்வர்ட் சொல்கிறான், நீங்கதான் மார்க் துப்பாக்கியை எடுத்து, பண்ணை மேஸ்திரியை சுட்டுக் கொன்றதாக!
பொய்! அது கடைந்து எடுத்த பொய்!


தன் மீது கொலைக் குற்றம் சாட்டப்படுவதை அறிந்து, மிஸ்டர் விட் பதறினர்!
மேஸ்திரி மேகானைக் கொன்றது எட்வர்ட்தான்! நான் பார்த்தேன்!
வெரிகுட் மிஸ்டர் விட்! இங்கு உள்ள பெரியவர்கள் முன் நீங்க அந்த கொலைக்கு சாட்சி சொல்லவே, நான் அப்படிச்-சொன்னேன்.
ஷெரீப்பின் உதவியாளர், விட் முதுகில் துப்பாக்கியால் அழுத்தினர்
மிஸ்டர் விட்! மேஸ்திரியைக்-கொன்றது எட்வர்ட்தான். ஆனால் கொலை செய்யச் சொன்னது நீங்க. மாடுகளைத் திருடிப் போகச்-சொன்னது நீங்க. அதை எல்லாம் எட்வர்ட் சொல்லிவிட்டான்!

பிறகு ஷெரீப், மிஸ்டர் விட்டை அழைத்துக்கொண்டு கெம்ப் பண்ணைக்கு வந்தார். அங்கே கெம்பின் மகள் எஸ்தர்தான் இருந்தாள்.
மிஸ் எஸ்தர்! கொலையாளியை பிடித்து விட்டோம். எல்லாவற்றுக்கும் காரணமாக இருந்த விட், மாடுகளைத் திருடி அடைத்து வைத்திருக்கும் இடத்தைக் காட்டுவதாகச் சொல்கிறுர்!
மாடுகளைத் தேடித்தான் அப்பா போய் இருக்கிறுர்.

கொஞ்ச நேரம் கழித்து காவல் தலைவர் ஷெரீப் டேன், அவரது உதவியாளர், மிஸ் எஸ்தர், மற்றும் விட் அனைவரும் புறப்பட்டு சென்றனர்.
மிஸ் உங்க மாட்டுப் பண்ணைக்கு காவல் போதாது.
திட்டம் போட்டு திருடற கூட்டம் எப்படியும் திருடும்!

வழியில், அவர்கள் மிஸ்டர் கெம்பையும் அவர் ஆட்களையும் சந்தித்தனர். கெம்ப் ஏமாற்றமாய் காணப்பட்டார்.
மிஸ்டர் ஷெரீப்! இந்த ஓடை நெடுக தேடி விட்டோம். மந்தையை காணோம்!
மந்தையை மறைத்து வைத்து இருக்கும் இடத்தை விட் காட்டுவார்!
ஆமா மிஸ்டர் கெம்ப்! மேஸ்திரி கொலை, மாட்டுத் திருட்டு எல்லாவற்றுக்கும் மூளை இந்த "விட்" தான்!
பெரிய மனிதன் வேடத்தில் கொலை! கொள்ளை! சே!
ஓடை வழியாக ஷெரீப்பையும் மற்றவர்களையும் அழைத்துச் சென்ற விட், மாட்டு மந்தை அடைக்கப்பட்டு இருந்த பெரிய சுரங்க கணவாயைக் காட்டினர். உடனே ஷெரீப்—
உள்ளே, விட்டின் ஆட்கள் காவல் இருப்பார்கள்! அவர்களுடன் துப்பாக்கி சண்டை போட அனைவரும் தயார் ஆகுங்க!

துப்பாக்கி சண்டை, உயிர்ச் சேதம் இவற்றை தவிர்க்க விரும்பிய
ஷெரீப், "விட்"டை உள்ளே போகவிட்டு, குதிரை மறைவில் சென்றார்.
மிஸ்டர் விட்! எந்த தந்திரமும் செய்ய வேண்டாம்! உம்மை எச்சரிக்கை செய்கிறேன்!
உள்ளே இருந்த முதல் காவலாளி
அருகே மிஸ்டர் விட் போன போது-
பாஸ். மாடுகளை வாங்க ஆள் கிடைத்து விட்டதா?
இல்லை! நமக்கு எதிரா எல்லாம் நடக்குது! நாம சுதாரிக்கணும்!
உடனே ஷெரீப், குதிரை மறைவில்
இருந்து வெளிப்பட்டு காவலாளியை
ஓங்கி குத்தினார்.
விட்! உயிர் மேல் ஆசை இருந்தால், மற்ற காவலாளிகளை துப்பாக்கியை கீழே போடச் சொல்லும்!


விட், குகை வழியாக உள்ளே போய் மாடுகளுக்கு காவலாக இருந்த தன் ஆட்களிடம் ஷெரீப் வந்திருக்கும் விவரத்தைச் சொன்னார்.
ஷெரீப்பிடம் சரண் அடையவா சொல்கிறீர்கள், பாஸ்! அப்படிச்--செய்தால், திருட்டு குற்றத்துக்கு தண்டனை கிடைக்குமே!
வேறு வழி இல்லையே! நான் இங்கிருந்து தப்பி போகிறேன். உங்களை நீங்க காப்பாற்றிக்--கொள்ளுங்க!


குதிரையை திருப்பிக்கொண்டு தப்பிக்க முனைந்த மிஸ்டர் விட்டை அவரது ஆட்களில் ஒருவன் சுட்டுக் கொன்றான்.
துரோகி! ஒழிந்து போ! எங்களை இழுத்து பறித்து ஆபத்தில் மாட்டிவிட்டு, தப்பிக்கப் பார்க்கிறாயா? சாவு!

விட் செத்து விழுந்ததும், மற்ற காவலர்கள் தப்பி ஓட குகை வாயிலை நோக்கி விரைந்து வந்தனர். அங்கே ஷெரீப், ஆட்களுடன் தயாராக இருந்தார். அதற்குள் மிஸ்டர் பில் தன் ஆட்களுடன் அங்கே வந்திருந்தார்.
உம்! சுடுங்க! ஒருவரும் தப்பி போகக் கூடாது. சரணாகதி! இல்லாவிட்டால், அதோ கதிதான்!

இரு தரப்பினரும் பயங்கரமாக மோதிய நேரத்தில், பண்ணை அதிபர் கெம்பை ஒருவன் சுட்டுக் கொல்ல முனைந்தான் அப்போது அவனை மார்க் சுட்டான்.
மார்க் நன்றி! என் தந்தையை காப்பாற்றினாய்!
கொஞ்ச நேரத்தில் சண்டை ஓய்ந்தது. ஷெரீப், கெம்ப், பில் ஆகியோர் தங்கள் ஆட்களுடன் வெற்றி பெற்றனர். சில திருடர்கள் காயம் அடைந்தனர். சிலர் செத்தனர்.
மிஸ்டர் கெம்ப்! இங்கே உங்க மாடுகளுடன், ஏற்கனவே திருடப்பட்ட மாடுகளும் உள்ளன. உங்கள் மாடுகளை தனியே பிரித்து ஓட்டிச் செல்லுங்க!
எனது மாடுகள் உயர் ரகம். அவற்றை இனம் கண்டு கொள்வது எளிதானது, ஷெரீப்!

அடுத்த நாள் பில்லுக்கும், அவர் ஆட்களுக்கும் தன் பண்ணையில் கெம்ப் பெரிய விருந்து கொடுத்தார். அதோடு மார்க்கை தன் மேஸ்திரி ஆக்கினார்!



ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: எஸ்.ராமஜெயம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி.கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.

கொள்ளைக் கூட்டம்!

"கிறிஸ்துமஸ் பரிசு!" மூலம் வாசகர்களுக்கு புத்தாண்டு வாழ்த்து கூறிய உத்தி பாராட்டதக்கது!

—இ. எஸ். ஆர். சாதிக்பாட்சா, அரகண்டநல்லூர்.

—இ. சண்முகம், ஆவடி.

பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் என்று மூன்று பிரிவாக இருப்பதால் பொங்கல் மலரில் 3 கதைகளை போட்டுவிட்டீர்களா? எங்களுக்கு முழு திருப்தி!

—என். சங்கர், சிங்காரப்பேட்டை.

—எஸ். லதாப் பிரியன், மணப்பாறை.

—அ. ரமேஷ் கணேசன், கடலூர்.

"கொள்ளைக் கூட்டம்" கதையில் பெண்களின் வீரம், எங்கள் மனதைக் கொள்ளை கொண்டது!

—தமிழ்செல்வி மின்சிவா, நாகர்கோவில்–1.

—ஆர். எம். எஸ். சிவகுமார், திருச்சி–18.

பறக்கத் தெரிந்த மன்னர் பீமா, பாதாளத்தில் குதிக்கும்பொழுது மரத்தை பிடிக்கவேண்டிய தேவை இல்லை. இந்த மாதிரி "ரீல்" கதைகள் வேண்டாம்! —இராம. கருப்பையா, ஆவுடையார் கோவில்.

பெண் வேடத்தில் ஆசாத், வெகு ஜோர்!

—டி. மூர்த்தி, திருப்போரூர்.

—எம். முகமது யூசுப் அலி, திட்டச்சேரி.

தொடர் கொலை!

"தொடர் கொலை!" — தொடர்கதை எடுத்த எடுப்பிலேயே விமான வேகத்தில், விறுவிறுப்பாய் செல்கிறதே!

—பி. எஸ். சி. கோபாலகிருஷ்ணன், திண்டிவனம்.

—ஆர். சிவாஜி, புதியகுளம், கோவை–45.

—வெ. ஸ்ரீபாபு, துறையூர்–10.

—ப. காஜா ஜலாலுதீன், தேரிழந்தூர்.

ஆரம்பமே விபத்து! இனி என்ன ஆபத்தோ!

—ஏ. சுப்ரமணியம், கைக்கோளபாளையம்.

—கே. நியாஸ் அகமத், போர்ணம்பட்டு.

பல உயிர்களைப் பழிவாங்கும் விமான விபத்துடன் கதை தொடங்கி உள்ளது. தலைப்புக்கு தக்கப்படி இனி எத்தனை கொலைகளோ! —எஸ். முத்தம்மாள், முத்துப்பேட்டை.

—வி. விஜில்குமார், பார்த்திவபுரம்.

உண்மையில், இந்தக் கல்யாண் யார்? தெரிந்துகொள்ள துடிக்கிறேன். —சி. எஸ். ரமேஷ், பெரம்பூர், சென்னை–11.

சந்தேகம் இல்லாமல் இது திகில் கதைதான்!

—எம். புவனேசுவரி, பூரிவாக்கம் கிராமம்.

—எஸ். ரகுபதி, சுலைமான், கூடுவாஞ்சேரி.

—பூ. பிரபாகர், கீரனுர்.

வாசகர் கருத்து

ரூ. 50- பரிசு: கருத்துப் போட்டி -32

"மேஸ்திரி கொலை!" சித்திரக் கதையை படித்துவிட்டீர்கள் அல்லவா? இனி இந்தக் கதையில், உங்கள் மனதைக் கவர்ந்த சம்பவம் எது? அதற்கான காரணம் என்ன என்று உங்கள் கருத்தை, "ராணி காமிக்ஸ்", ஒரு பக்க அளவுக்கு மிகாமல், எழுதி அனுப்புங்கள்.

மிகச் சிறந்த கருத்துக்கு ரூ. 50 பரிசு வழங்கப்படும்.

தேர்ந்து எடுக்கப்பட்ட கருத்து, 15–3–86 இதழில் பிரசுரிக்கப்படும்.

கருத்துப் போட்டி நிபந்தனைகள்:—

(1) கருத்துக்கள் எங்களுக்கு வந்து சேரவேண்டிய கடைசி தேதி 25–2–86. அதன்பின் வரும் கருத்துக்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

(2) போட்டியில் கலந்து கொள்பவர்களுக்கு வயது வரம்பு கிடையாது.

(3) போட்டியில், ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. சட்டப்படி கட்டுப்படுத்த முடியாது.

(4) கீழே உள்ள பாரத்தை பூர்த்தி செய்து, "கருத்து"டன் சேர்த்து அனுப்ப வேண்டும். அது இல்லாமல் வரும் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

ராணி காமிக்ஸ்

கருத்துப் போட்டி எண்: 32

பெயர்: ....

முகவரி: ....

....

....

....

முகவரி:—
கருத்துப் போட்டி.
"ராணி காமிக்ஸ்",
1091, பெரியார்
நெடுஞ்சாலை,
சென்னை–600 007.

போட்டி நிபந்தனைகளுக்கு கட்டுப்படுகிறேன்.

....

(கையொப்பம்)

கருத்துப் போட்டி எண்-30 முடிவு

"கொள்ளைக் கூட்டம்!" சித்திரக் கதை கருத்துப் போட்டியில் கலந்து கொண்டவர்களில் இரா. சித்ரா (வடலூர்-3), எம். எம். லூயிஸ் (தஞ்சை-1), வே. ரேணு (கிருஷ்ணகிரி), லட்சுமிப் பிரியா (பெங்களூர்-53), எஸ். ஜெயா டெய்சி ராணி (லால்குடி), க. சாரதி (பெசன்ட் நகர், சென்னை-90), ரா. தேவ் ஆனந்த் (பாண்டிச்சேரி-9), டி.எஸ்.வி. மாதேஸ்வரன் (சேலம்-6), கே. பி. குமுதமணி பி. எஸ்சி. (ஈரோடு-9), மணிவண்ணன் (மேட்டூர் அணை-2) ஆகியோர் சிறந்த கருத்துக்களை எழுதி இருந்தனர்.

ஆனால், மிகச் சிறந்த — வித்தியாசமான கருத்தை எழுதி ரூ. 50 பரிசு பெறுபவர்:—

ஜி. உமா மகேஸ்வரி,
21—ஏ, முத்துரங்கம் தெரு,
திருமங்கலம்—626 706
மதுரை மாவட்டம்.

அவரது கருத்து வருமாறு:—

"கொள்ளைக் கூட்டம் சித்திரக் கதையில் என்னைக் கவர்ந்த இடம் பல இருந்தன. என்றாலும், கொள்ளையர் தலைவன் உக்கம் சிங், இன்ஸ்பெக்டர் ஆசாத் காதலி மீராவை கடத்த விரும்பும் போது, அவன் கூட்டாளி தனூர், "அவள் மீது ஆசை வேண்டாம். அவளை மறந்துவிடுங்க" என்று கூறும் கட்டமே என்னை மிகவும் கவர்ந்து, சிந்தனையைத் தூண்டியது.

தனூர் பல வகையில் கெட்டவனாக இருக்கலாம். ஆனால், தன் தலைவனுக்கு ஆபத்து வரக்கூடாது என்று, நல்லதை எடுத்துச் சொல்கிறான்.

கொள்ளையர் தலைவனுக்கு எதிராக கருத்தைச் சொன்னால், கடும் தண்டனை கிடைக்கும். அப்படி இருந்தும் துணிவுடன் தன் கருத்தை தனூர் வெளியிடுவது பாராட்டதக்கது. இப்படிபட்ட கூட்டாளிகள் கிடைப்பது அரிது. இங்கே நல்ல நண்பன்— கூட்டாளி எப்படி இருக்க வேண்டும் என்ற இலக்கணம் கிடைக்கிறது. அவன் இடித்துச் சொல்கிற நல்ல நண்பன்.

இந்த இடத்தில் தனூர் ராவணனுக்கு புத்தி கூறிய விபிசணனாக நம் கண் முன் உயர்ந்து நிற்கிறான்.

அவன் பேச்சை கேட்காத உக்கம்சிங், பின்னால் அழிகிறான். கதையின் முடிவுக்கு—கொள்ளைக் கூட்டத்தின் அழிவுக்கு இந்த இடத்தில்தான் கதை ஆசிரியர் வித்திடுகிறார். உக்கம்சிங் கூட்டாளிகளுடன் பிடிபடுவதற்கு மூலமே இந்த இடம்தான். அதனால் அது என்னைக் கவர்ந்தது."

இவ்வாறு உமா மகேஸ்வரி கூறி உள்ளார்.

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Regd. No. TN/MS(N)/461

ராணி காமிக்ஸ்

அடுத்த இதழில்...!

பாங்கிக் கொள்ளைப் பணத்தை மீட்க, நடிகையுடன் சேர்ந்து ஆசாத் நடத்தும், போராட்டம்!

நடிகை சுரேகா!

முழு நீள சித்திரக் கதை!

சித்ரா மணாளன் எழுதும்,

தொடர்-கொலை!

திகில் தொடர்கதை!

ரூ. 50 பரிசு : வாசகர் போட்டி!

படிக்கத் தவறாதீர்கள்!

ராணி காமிக்ஸ்

1.3.86-ல் வெளிவருகிறது!

PRINTED AT RANI PRINTERS, MADRAS-7